


**ஜீலை 23 - புனித பிரிஜித் (ஸ்வீடன்) 1303-1373)**

மூன்று வயது முடியும் வரை இவளால் ஒரு வார்த்தை முதலாய் பேசமுடியாது. திடீரென ஒரு நாள் பேசத்தொடங்கினாள். ஓர் இரவு அவள் நித்திரை செய்கையில் திடீரென விழித்தாள். படுக்கையின் அருகில் ஓர் அழகிய பீடத்தைக் கண்டாள். தேவதாய் அதில் நின்றாள். பரலோக ஒளி அவளைச் சூழ்ந்திருந்தது. அரசிபோல் ஆடைகள் அணிந்திருந்தாள். கையில் விலையுயர்ந்த கிரீடம் ஒன்று இருந்தது. "பிரிஜித், இங்கே வா" என அன்னை அழைத்தாள். ஏழு வயது சிறுமியான பிரிஜித் படுக்கையினின்று குதித்தெழுந்து பரலோக அரசியின் பாதத்தடியில் முழந்தாளிட்டாள். "இந்தக் கிரீடம் உனக்கு வேண்டுமா?" என அன்னை கேட்டாள். "ஆம்" என்று தெரிவிக்க சிறுமி தலையசைத்துக் கையை நீட்டினாள். கிரீடத்தை அன்னை அவள் தலையில் வைத்தாள்.

இவளுக்கு பத்து வயதாயிற்ற. ஓர் இரவு நம் ஆண்டவர் இவள் முன் தோன்றினார். அவரது உடல் முழுதும் ஒரே காயம், இயேசு சிலுவையில் அறைப்பட்டிருந்தவர் போல் காணப்பட்டார். "மகளே என்னை எவ்வித இரக்கமும் இன்றி எப்படிக் காயப்படுத்தியிருக்கிறார்கள் என்று பார்" என்று அவர் கூறினார். சிறுமி "ஆண்டவரே உம்மை இவ்விதம் காயப்படுத்தியது யார்?" என்றாள். "என்னை நிந்திக்கிறவர்களும், என்னை சட்டை செய்யாது விலகுகிறவர்களுமே இவ்வாறு செய்திருக்கிறார்கள்" என்றுகூறி ஆண்டவர் மறைந்தார். அதிலிருந்து பிரிஜித் ஆண்டவரது பாடுகள் மேல் அதிக பக்தி கொள்ளலானாள். அவளை ஓர் இளவரனுக்கு மணம் முடித்து வைத்தார்கள். எட்டு மக்கள் பிறந்தது. இவள் பெண்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு. கணவனை அன்புடன் பராமரித்தாள். ஏழைகள் நோயாளிகளது தேவைகளைப் பூர்த்தி செய்தாள். புனித யாகப்பருடைய திருத்தலத்திற்கு கணவனும், மனைவியும் சென்றனர். திரும்பியதும் கணவர் ஒரு சந்நியாச மடத்தில் சேர்ந்து புனிதராக இறந்தார். அவர் இறந்த பின் இவளும் துறவி ஆனாள். ஆண்டவர் வாழ்ந்து பாடுபட்டு இறந்து பூமியை தரிசித்தபின் இவள் உரோமைக்குத் திரும்பினாள். ஆண்டவருடைய பாடுகளைப்பற்றி அடிக்கடி சிந்தித்தமையால் அற்பப் பாவத்தையம் விலக்குவது இவளுக்கு எளிதாயிருந்தது. ஒவ்வொரு நாளும் பாவசங்கீர்த்தனம் செய்வாள். தனது சிறிய குற்றத்தை நினைத்தும் மனம் கசிந்து அழுவாள். வீரத்துடனும் கடவுளுக்குப் பணிந்த மனதுடனும் இருந்தாள்.

**சிந்தனை:** உண்மையான கிறிஸ்தவன் பாடுபட்ட கிறிஸ்துநாதர் மீது அனுதாபம் கொண்டிருப்பான். அவர் பட்ட பாடுகள் யாருக்கும் வீணாகாதபடி பாவிகளுக்காக செபிப்பான். ஒறுத்தல்கள் செய்வான். "இரக்கம் இன்றி நான் யாருக்கும் தீர்ப்பு கூறுவது இல்லை" நரகத்திற்கு தீர்ப்பிடப்பட்டவர்களுக்கும் நான் இரக்கம் காட்டுகிறேன். நான் மனித சுபாவத்தையெடுத்துக் கொண்டமையால் மனிதன் என் சகோதரன் ஆகிறான். ஒரு சகோதரன் போல் நான் தீர்ப்புக் கூறுகிறேன். (ஆண்டவர் பிரிஜித் அம்மாளுக்குச் சொன்னது)

**செபம்:** சிலுவையில் உயிர்விட்ட ஆண்டவரே, நாங்கள் அற்பப் பாவத்தையும் விலக்கும் வரம் தாரும்.